(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவையின் 2023-2024 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 54 முதல் 63 வரையிலான 10 அறிக்கைகளை அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளியவனான என்னை மனுக்கள் குழுவின் தலைவராக நியமித்து, அறிக்கையைச் சமர்ப்பிக்க வாய்ப்பு தந்த முதலமைச்சர்களின் முதல்வர், தளபதி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 21-வது மற்றும் 22-வது ஆகிய இரண்டு அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

9. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2022), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.